**வயல்களில் மழை நீர் : நூறு ஏக்கரில் விவசாயப் பணிகள் பாதிப்பு**

First Published : 27 Nov 2010 12:11:37 PM IST

விருதுநகர், நவ. 26: விருதுநகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் வயல்களில் அதிக அளவு மழை நீர் தேங்கியுள்ளதால் 100 ஏக்கரில் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் இப்பகுதிகளில் உள்ள கண்மாய்கள், நீர் நிலைகள் அனைத்தும் நிரம்பி வருகின்றன. இங்குள்ள செங்குன்றாபுரம், குமிழங்குளம், எலிங்கநாயக்கன்பட்டி, செவல்பட்டி, செங்கோட்டை. சின்னப்பநாயக்கன்பட்டி, புதூர், வள்ளியூர், ஆமத்தூர், தவசிலிங்காபுரம், மூளிப்பட்டி உள்பட பல பகுதிகளில் ஓடைகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கரைகள் உடைந்துள்ளன.

இப்பகுதிகளில் உள்ள அனைத்துக் கண்மாய்களும் நிரம்பி மறுகால் ஓடுகின்றன. இக்கிராமங்களில் நீர் நிலைகள், ஓடையோரங்களில் விளைநிலங்கள் உள்ளன. இதனால் விளைநிலங்களில் எளிதில் மழைநீர் புகுந்து குளம் போல் தண்ணீர் தேங்கியுள்ளது. அதனால் நடவுப் பணி மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து எரிச்சநத்தம் விவசாயி சாத்தையா என்பவர் கூறுகையில், தொடர் மழையால் விளைநிலங்களில் தண்ணீர் தேங்கி இருக்கிறது. அதனால் நாற்று நடும் பணி மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

எலியநாயக்கன்பட்டியைச் சேர்ந்த விவசாயி ராசையா கூறுகையில், ஏற்கெனவே சோளம், பயறு உள்ளிட்ட தானிய வகைகளைப் பயிரிட்டுள்ளேன். மானாவாரி பயிர்களுக்கு மழை விட்டுவிட்டுப் பெய்ய வேண்டும். அதிக நீரும் தேங்கக் கூடாது என்பதால் பயிர்கள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தொடர் மழையால் அதிகம் தண்ணீர் தேங்கி உள்ளதால் செடிகளின் வேர்கள் அழுகி விடும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

**அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு விருது**

First Published : 27 Nov 2010 11:50:06 AM IST

திண்டுக்கல், நவ. 26: விவசாயத்தில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு வரும் குடியரசு தினவிழாவின்போது பேரறிஞர் அண்ணா விருதினை அரசு வழங்க உள்ளதாக, வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:இவ்விருது பெற விரும்பும் விவசாயிகள், குறைந்தது 50 சென்ட் பரப்பளவில் பயிர்சாகுபடி செய்திருக்க வேண்டும். நிலத்தின் சொந்தக்காரராகவோ, குத்தகைதாரராகவோ இருக்கலாம். 1. ராஜராஜன் 1000 நெல் சாகுபடி, 2. சாதாரண நெல் சாகுபடி, உளுந்துபயிர் சாகுபடி, பாசிபயறு சாகுபடி என 4 வகை சாகுபடி முறைகளில் அதிக உற்பத்தி திறனை நிரூபிக்கலாம்.

போட்டியில் பங்குபெற நெல் பயிருக்கு 150, பயறு வகை பயிர்களுக்கு 50கட்டணமாகச் செலுத்த வேண்டும்.அறுவடை செய்யவுள்ள தேதியினை 15 தினங்களுக்கு முன்னதாகதெரிவிக்க வேண்டும். உயர்மட்ட அலுவலர்கள் கொண்ட நடுவர் குழுக்களின் மூலம், அறுவடை செய்து மகசூல் திறனை நிர்ணயிப்பர். எந்த விவசாயி ஏக்கருக்கு 2,500 கிலோ நெல், ஏக்கருக்கு 200 கிலோ, பயறு குறைந்தபட்சம் உற்பத்தித் திறன் எடுத்து வருகின்றனரோ அவர்கள் மட்டும் தகுதியுடையவர்கள் ஆவர். போட்டியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள், வடமதுரை வேளாண் விரிவாக்கஅலுவலர்களைத் தொடர்பு கொண்டு, போட்டிக்கான கட்டணத்தைச் செலுத்தி பயனடைய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**வயல்களில் மழை நீர் : நூறு ஏக்கரில் விவசாயப் பணிகள் பாதிப்பு**

First Published : 27 Nov 2010 12:11:37 PM IST

விருதுநகர், நவ. 26: விருதுநகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் வயல்களில் அதிக அளவு மழை நீர் தேங்கியுள்ளதால் 100 ஏக்கரில் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.
விருதுநகர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் இப்பகுதிகளில் உள்ள கண்மாய்கள், நீர் நிலைகள் அனைத்தும் நிரம்பி வருகின்றன. இங்குள்ள செங்குன்றாபுரம், குமிழங்குளம், எலிங்கநாயக்கன்பட்டி, செவல்பட்டி, செங்கோட்டை. சின்னப்பநாயக்கன்பட்டி, புதூர், வள்ளியூர், ஆமத்தூர், தவசிலிங்காபுரம், மூளிப்பட்டி உள்பட பல பகுதிகளில் ஓடைகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கரைகள் உடைந்துள்ளன.

இப்பகுதிகளில் உள்ள அனைத்துக் கண்மாய்களும் நிரம்பி மறுகால் ஓடுகின்றன. இக்கிராமங்களில் நீர் நிலைகள், ஓடையோரங்களில் விளைநிலங்கள் உள்ளன. இதனால் விளைநிலங்களில் எளிதில் மழைநீர் புகுந்து குளம் போல் தண்ணீர் தேங்கியுள்ளது. அதனால் நடவுப் பணி மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இதுகுறித்து எரிச்சநத்தம் விவசாயி சாத்தையா என்பவர் கூறுகையில், தொடர் மழையால் விளைநிலங்களில் தண்ணீர் தேங்கி இருக்கிறது. அதனால் நாற்று நடும் பணி மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

எலியநாயக்கன்பட்டியைச் சேர்ந்த விவசாயி ராசையா கூறுகையில், ஏற்கெனவே சோளம், பயறு உள்ளிட்ட தானிய வகைகளைப் பயிரிட்டுள்ளேன். மானாவாரி பயிர்களுக்கு மழை விட்டுவிட்டுப் பெய்ய வேண்டும். அதிக நீரும் தேங்கக் கூடாது என்பதால் பயிர்கள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தொடர் மழையால் அதிகம் தண்ணீர் தேங்கி உள்ளதால் செடிகளின் வேர்கள் அழுகி விடும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

**குறைந்த நாளில் அதிக மகசூல் கம்பு சாகுபடிக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,01:53 IST

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில் பெய்யும் வட கிழக்கு பருவ மழையை பயன்படுத்தி குறுகிய நாளில் அதிக லாபம் தரும் கம்பு சாகுபடி செய்யலாம்' என, வேளாண்துறை இணை இயக்குனர் துரைசாமி தெரிவித்து உள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் தற்போது வட கிழக்கு பருவ மழை பெய்ய துவங்கியுள்ளது. அதனால், குறுகிய காலமான 80 முதல் 85 நாளில் மகசூல் தரக்கூடிய கம்பு பயிரை விவசாயிகள் சாகுபடி செய்யலாம். மானாவாரி பயிராகவும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் இறவை பயிராகவும் கம்பு சாகுபடி செய்யலாம். அரூர், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் பென்னாகரம் சுற்று வட்டார பகுதியில் பரவலாக இறவையில் கம்பு சாகுபடி செய்யப்படுகிறது.

பொதுவாக மிகவும் வறட்சியான பகுதியிலும், சத்துக்குறைவான மண்பாங்கான நிலத்திலும், சத்து அதிகம் உள்ள வண்டல் மண் நிலத்திலும் கம்பு பயிர் செய்யலாம். வேளாண் துறை அறிவுறுத்தும் தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தால், இறவை கம்பு சாகுபடியில் ஏக்கருக்கு ஆயிரத்து 200 கிலோவும், மானாவாரியில் ஏக்கருக்கு 800 கிலோவும் மகசூல் பெறலாம். ஒரு கிலோ கம்பு 10 ரூபாய்க்கு விற்பனையானாலும் இறவை கம்பு சாகுபடியில் ஏக்கருக்கு 12,000 ரூபாயும், மானாவாரி கம்பு சாகுபடியில் 8,000 ரூபாயும் லாபம் பெற வாய்ப்புள்ளது.

நல்ல மகசூல் பெற ஐசிஎம்வி221, ஐசிஎம்எஸ்7703 மற்றும் கோ7 ரக கம்புகளை சாகுபடி செய்யலாம். ஏக்கருக்கு 2 கிலோ விதைக்கு தலா ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம், மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போபாக்டீயா நுண்ணுயிர் கலவையை 200 மி.லி., ஆரிய அரிசி கஞ்சியுடன்

கலந்து 30 நிமிடம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும். கடைசி உழவுக்கு முன் 300 கிலோ மக்கிய தொழு உரத்துடன் 9 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை கலந்து நாற்றங்காலில் சீராக இடவேண்டும். நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்ட சத்தை நட்டவுடன் போதுமான அளவு மணலுடன் கலந்து மேலாக இடவேண்டும். வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தும் சரியான தொழில் நுட்பங்களை கம்பு சாகுபடியில் விவசாயிகள் கையாண்டால் குறைந்தநாளில் குறைந்த நீரை கொண்டு நல்ல பயன் பெறலாம். மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை விவசாயிகள் அணுகலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**காய்கறி, பழங்கள் சாப்பிடுவோர் 40 சதவீதம் உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,03:48 IST

கோவை: ""சர்க்கரை நோய் உள்ளிட்ட நோய்கள் அதிகரித்து வருவதால் இந்தியாவில் காய்கறி, பழங்கள் சாப்பிடுவோர் எண்ணிக்கை 30-40 சதவீதம் அதிகரித்து விட்டது. இதனால் உணவு உற்பத்தியை விட தோட்டக்கலை உற்பத்தி வரும் ஆண்டுகளில் அதிகரித்து விடும்,'' என்று டில்லி தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் எச்.பி.சிங் கூறினார். கோவை வேளாண் பல்கலையில் தாவர பல்லுயிர் பெருக்கம் மற்றும் நில எழிலூட்டுதல் குறித்த 2 நாள் தேசிய கருத்தரங்கு நேற்று மாலை துவங்கியது. பல்கலை துணை வேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: நகரங்களில் வசிக்கும் 15 வயதுக்கு மேற்பட்ட 11 சதவீதம் பேருக்கு இன்று சர்க்கரை நோய் உள்ளதாகவும், கிராமப்புறங்களில் மூன்று சதவீத பேருக்கு மட்டுமே உள்ளதாகவும் ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. ஆகவே நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இயற்கை பூங்காக்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும்.

இதற்காகவே பல்கலை சார்பில் ஆண்டுதோறும் பிளவர் ÷ஷாக்களும் படிப்புகளும் நடத்தப்படுகின்றன. இது தொடர்பான மாணவர் பரிமாற்றம் மற்றும் படிப்புக்காக சிங்கப்பூர் தேசிய பூங்கா வாரியத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு, துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார். டில்லி தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் எச்.பி.சிங் பேசியதாவது: பூக்கள் நிறைந்த சூழலிலும்,இல்லாத சூழலிலும் 15 நாட்கள் வசித்தவர்கள் இடையே நடத்திய ஆய்வில், பூக்கள் நிறைந்த சூழலில் வசித்தவர்களின் திறன் 20 சதவீதம் உயர்ந்துள்ளதும் சர்க்கரை அளவு குறைந்ததும் ஆய்வில் கண்டறியப்பட்டது.

நாடு சுதந்திரம் பெற்ற புதிதில் உணவு உற்பத்தி 50 மில்லியன் டன்களாக இருந்தது. தோட்டக்கலை உற்பத்தி 25 மில்லியன் டன்கள் ஆக இருந்தது. இன்று தோட்டக்கலை உற்பத்தி 226 மில்லியன் டன்கள் ஆக உயர்ந்து விட்டது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் தோட்டக்கலை உற்பத்தி, உணவு உற்பத்தியை மிஞ்சி விடும். மக்களின் உணவு பழக்கம் வேகமாக மாறி வருவதே காரணம். சர்க்கரை நோய் உள்ளிட்ட நோய்கள் காரணமாக, 30-40 சதவீதம் மக்கள் காய்கறிகள், பழங்களை அதிகளவில் சாப்பிடத் துவங்கியுள்ளனர். இதனால் தமிழகத்தில் துவக்கப்படவுள்ள தோட்டக்கலை பல்கலை, உலகின் நம்பர் ஒன் பல்கலையாக மாறுவது உறுதி," என்றார். பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பல்கலை பேராசிரியர்கள், டீன்கள், ஆராய்ச்சியாளர்கள் திரளாக பங்கேற்றனர். இக்கருத்தரங்கு இன்று நிறைவு பெறுகிறது.

**பவானிசாகர் நீர் நிர்வாகம் சிக்கனமாக மேற்கொள்ள முடிவு ஈமு பண்ணைகள் மீது புகார்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,03:07 IST

ஈரோடு: பவானிசாகர் அணையில் நீர் இருப்பு குறைவாக உள்ளதால், நீர் நிர்வாக சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. ஈமு கோழிப்பண்ணை குறித்து போலீஸ் விசாரணைக்கு கலெக்டர் உத்தரவிட்டார். ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது.
விவசாய சங்க பிரதிநிதிகள் பேசிய விபரம்:
கீழ்பவானி பாசன சங்கத் தலைவர் நல்லசாமி: சமீபத்தில் பெய்த மழையால், பவானிசாகர் அணையில் 18 டி.எம்.சி., தண்ணீர் உள்ளது. அணையில் போதிய மழை பெய்யவில்லை. இருக்கும் தண்ணீரை சிக்கனப்படுத்த வேண்டும்.
பவானிசாகர் அணை பொறியாளர்: நீர் நிர்வாக சிக்கன நடவடிக்கை தொடரும்.
தமிழக விவசாயிகள் சங்க செயலாளர் சுப்பு: சென்னிமலை மேற்கு தலவுமலையில் கலெக்டர் அனுமதியுடன் மண் அள்ளப்படுகிறது.

டி.ஆர்.ஓ., குமரவேல் பாண்டியன்: சென்னிமலை மற்றும் தலவுமலை பகுதியில் மலையை வெட்டி மண் அள்ள ஆறு மாதத்துக்கு முன் கலெக்டர் அனுமதி கொடுத்துள்ளார். அது பட்டா இடமாக இருந்தாலும் உரிய இடத்துக்கு சென்று ஆய்வுப்பணி நடத்தப்படும்.
மேட்டூர் வலதுகரை வாய்க்கால் சங்கத் தலைவர் மோகன்: அரசின் "டானாப்' நிறுவனம் மூலம்

இலவசமாக வழங்கப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்து செயலற்றதாக உள்ளது. தோட்டக்கலைத் துறை வழங்கும் மருந்துகள் பயனின்றி உள்ளன.
தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் பெரியசாமி: கருமாண்டி செல்லிபாளையம் மஞ்சள் வணிக வளாகம் போதுமானதாக இருக்காது. ஒரே இடத்தில் அனைத்து வசதிகளும் அமைய வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு 2,000 ரூபாய் என அரசு அறிவித்தது; ஆனால், சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம் 1,985 ரூபாய் மட்டுமே தருகிறது. ஆலைக்கு செல்லும் சாலை மிக மோசமாக இருக்கிறது.
கலெக்டர்: ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் அமைய நடவடிக்கை எடுக்கப்படும். நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சாலை வசதி செய்து தரப்படும். சில சாலைகளை 100 நாள் வேலை உறுதியளிப்பு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன சங்கத் தலைவர் தளபதி: பவானிசாகர் அணையின் மொத்த கொள்ளளவு 120 அடி. இதில் 15 அடி சேறாக உள்ளது. 105 அடி தண்ணீர் மட்டுமே இருப்பு கொள்ள முடிகிறது. மழைக்காலத்தில் தண்ணீர் வீணாக கடலில் கலக்கிறது. சத்தியில் இருந்து பவானி வரை ஐந்து தடுப்பணைகளையாவது கட்ட வேண்டும்.ஈமு கோழி வளர்ப்பு என்ற பெயரில் மிகப்பெரிய மோசடி நடந்து வருகிறது. ஈமு கோழி வளர்ப்போர் கிராமங்களுக்கு வந்து விவசாயிகளை அணுகி, முதலில் சிறிய அளவு முதலீடு செய்யுங்கள்; பின்னர் அதிகளவு பலன் கிடைக்கும்.

ஈமு கோழி, முட்டை, இறகு என அனைத்துமே பயன்படும் என பொய் பிரச்சாரம் மேற்கொண்டு, விவசாயிகள் மற்றும் மகளிர் குழுவினரிடம் இருந்து முன்தொகையாக பணம் பெற்றுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் விவசாயிகள் 15 கோடி ரூபாய் வரை ஏமாந்துள்ளனர். ஈமு கோழி குறித்து கால்நடைத்துறை சார்பில் இதுவரை எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. ஈமு கோழி பாலைவனப் பறவை. அது எப்படி இவ்வளவு தொகையை பெற்றுத்தரும் என தெரியவில்லை. போலீஸாரும், மாவட்ட நிர்வாகமும் ஈமு கோழி குறித்த உண்மை நிலவரத்தை கண்டறிய வேண்டும்.

கலெக்டர்: ஈமு கோழி வளர்ப்போர் குறித்து, கால்நடைத்துறை அதிகாரிகள் உடனடியாக அறிக்கை வழங்க வேண்டும். பெருந்துறை ஈமு கோழிப்பண்ணை குறித்து போலீஸார் உரிய விசாரணை நடத்துவர். இது தொடர்பாக சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பவானிசாகர் அணையில் உள்ள சேறு அகற்றவும், தண்ணீரை சிக்கனப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தடுப்பணை கட்ட முயற்சி மேற்கொள்ளப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**வயல்வெளி பள்ளி பயிற்சி வகுப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,02:55 IST

முசிறி: முசிறியில் தமிழ்நாடு வேளாண்மை துறை, பசுமை சிகரம் அறக்கட்டளை ஆகியவை சார்பில் மாநில அளவிலான வயல்வெளி பள்ளி பயிற்சி வகுப்பு வேளாண் அலுவலகத்தில் நடத்தினர். பயிற்சி வகுப்பிற்கு பசுமை அறக்கட்டளை தலைவர் லோகநாதன் வரவேற்றார். வேளாண் அலுவலர் செல்வம் தலைமை வகித்து வயலில் நன்மை தரும் பூச்சிகள், தீமை தரும் பூச்சிகள் என்ற தலைப்பிலும், முசிறி உதவி வேளாண்மை இயக்குனர்கள் ராசாமணி, கிருஷ்ணமூர்த்தி, தொட்டியம் வேளாண் சந்திரசேகர் ஆகியோர் பஞ்சகாவ்யா மூலிகை பூச்சி விரட்டி தயாரிப்பு குறித்தும் விளக்கி பேசினர்.முகாமில், பல்வேறு மாவட்டங்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சி பெற்றனர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தொட்டியம் உதவி இயக்குனர் சந்திரசேகர் சான்றிதழ் வழங்கினார்.

**பசுமைக் குடில் அமைக்க 50 சதவிகித மானியம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,02:47 IST

கொட்டாம்பட்டி:""கொட்டாம்பட்டியில் பசுமைக்குடில் அமைத்து, சாகுபடி செய்யவிரும்பும் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியம் வழங்கப்படும்," என தோட்டக்கலை உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரி கூறியுள்ளார். அவர் கூறியதாவது:500 சதுர மீட்டரில் இரும்பு குழாயால் பசுமைக்குடில் அமைக்க 4.67 லட்சம் ரூபாய் செலவாகும். இதில் 50 சதவீதம் பின் மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ஒரு நபருக்கு 1000 சதுர மீட்டர் பரப்பளவில் பசுமைக்குடில் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. உயர்ரக, வீரியஒட்டு காய்கறி பயிர்களையும், ஏற்றுமதிக்கான கொய்மலர்களையும் சாகுபடி செய்யலாம். இதன்மூலம் திறந்தவெளி சாகுபடியைவிட மூன்று மடங்கு கூடுதல் மகசூல் பெறலாம். மேலும் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம். பயன்பெற விரும்புவோர் மேலும் விபரங்களுக்கு கொட்டாம்பட்டி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்,என்றார்.

**மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள்விவசாயக் கல்லூரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,02:44 IST

மதுரை:மதுரை விவசாயக் கல்லூரியின், வேளாண் அறிவியல் மைய பேராசிரியர்கள் வெங்கட்ராமன், பாத்திமா கனி வெளியிட்ட அறிக்கை :மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், பல்வேறு பருவங்களில் உள்ள நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியும், பாதி நீர்

வடிந்தும் காணப்படுகின்றன. வயலில் தேங்கியுள்ள நீரை வடிகால் வசதி செய்து, முழுவதுமாக தண்ணீர் வடிக்க வேண்டும். இளம் நாற்றுகள் மற்றும் வளர்ந்த நாற்றுகள் தண்ணீரில் மூழ்கி, நெற்பயிர் அழுகியும், நட்ட இளம் பயிர் பெரும்பகுதி கரைந்தும் காணப்பட்டால் அவற்றை களைந்துவிட வேண்டும்.

குறுகிய கால ரகங்களை பாய் நாற்றங்கால் முறையில், நாற்று விட்டு நடவு செய்து, அப்பகுதியில் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். அல்லது நாற்றுகள் கைவசம் இருந்தால், அதே ரகத்தை நடவு செய்யலாம். தண்ணீர் முழுதும் வடியாத இடங்களில், பாதியளவு நீரில் மூழ்கியிருந்தால் மஞ்சள் மற்றும் பழுப்பு நிறமாக பயிர் மாறிவிடும். துத்தநாகம் மற்றும் தழைச்சத்து பற்றாக்குறையால் இப்பிரச்னை ஏற்படும்.

ஒரு ஏக்கருக்கு, 200 லிட்டர் தண்ணீரில் இரண்டு கிலோ யூரியா, ஒரு கிலோ துத்தநாக சல்பேட் கலந்து, கைத்தெளிப்பான் கொண்டு பயிரின் இலை மேல் தெளிக்க வேண்டும். தண்ணீர் வடிந்திருந்தாலும், ஊட்டச்சத்து பற்றாக்குறை ஏற்படும்.

இதற்கு மேல் உரமாக, ஏக்கருக்கு 42 கிலோ அம்மோனியம் குளோரைடு அல்லது 50 கிலோ அம்மோனியம் சல்பேட் தெளிக்கலாம். அல்லது 22 கிலோ யூரியாவுடன், 15 கிலோ ஜிப்சம், நான்கு கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து இரவு முழுதும் வைக்க வேண்டும். மறுநாள் இதனுடன் 17 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தை சேர்த்து பயிருக்கு இடவேண்டும்.அதிக ஈரப்பதத்தால் இலை சுருட்டுப்புழு தாக்குதல் வர வாய்ப்புள்ளது.

நெற்பயிரில் பத்து சதவீத இலைகள் பாதித்திருந்தால், ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில், பாஸ்லோன் 600 மில்லி அல்லது குளோரி பைரிபாஸ் 500 மில்லி பூச்சிகொல்லி மருந்தை தெளிக்க வேண்டும். குலைநோய் தாக்கத்தினால் கண் வடிவ சிறுபுள்ளிகள் காணப்பட்டால், ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில், கார்பன்டாசின் 100 கிராம் அல்லது எடிபென்பாஸ் 200 கிராம் பூஞ்சைக் கொல்லி மருந்தை கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இதன்மூலம் நெற்பயிர்களை மழைக்காலத்தில் பாதுகாக்க வேண்டும், என தெரிவித்துள்ளனர்.

**பயிர் உற்பத்திப் போட்டியில்விவசாயிகள் பங்கேற்க வேண்டும் கலெக்டர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,02:32 IST

மதுரை: ""பயிர் உற்பத்திப் போட்டியில் மதுரை விவசாயிகள் அதிகளவில் பங்கேற்க வேண்டும்,'' என கலெக்டர் சி.காமராஜ் கேட்டுக் கொண்டார்.மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்

கூட்டத்தில் அவர் பேசியதாவது:தற்போது மழை பெய்து வருவதால் பெரியாறு அணை நீர்மட்டம் 127 அடி, வைகை அணையில் நீர்மட்டம் 69.59 அடியாக உள்ளது. விவசாயிகளுக்கு தேவையான விதை, உரம், இடுபொருள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிங்சல்பேட் நுண்ணூட்ட உரம் கிடைக்க 12.75 லட்சம் அரசு நிதி பெறப்பட்டுள்ளது. ஒரு எக்டேருக்கு 25 கிலோ வீதத்தில் சிங்சல்பேட் வழங்கப்படும்.

விளைநிலம் குறைந்து வருவதால் விவசாயிகள் ராஜராஜன் 1000 நெல் நடவுமுறையை கடைபிடிக்க வேண்டும். இம்முறையில் 17 ஆயிரத்து 390 எக்டேர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இதில் அதிக மகசூல் பெறும் மூன்று பேருக்கு தலா 4 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படும். மேலும் பாசிப்பயறு, உளுந்து ஆகியவற்றில் அதிக மகசூல் பெறுவோருக்கும், முதல்வரால் குடியரசு தினவிழாவில் பதக்கம் வழங்கப்படும்.

இப்போட்டியில், மதுரை விவசாயிகள் கலந்து கொள்ள வேண்டும்.அதிகமழை பெய்வதால், பயிர்க்காப்பீடு செய்வது அவசியமாகிறது. சிறுகுறு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு நெல் பயிருக்கு 117 ரூபாய் பிரிமியம் செலுத்தினால், இழப்பீடு ஏற்படும்போது 13 ஆயிரத்து 24 ரூபாய் வரை பெறலாம். நீரினை பயன்படுத்துவோர் சங்கம், மகளிர் குழுக்கள், அக்ரி கிளினிக்குகள் தோட்டக்கலை, கரும்பு பயிர் இயந்திரங்களை வாங்கி, வாடகைக்கு விடலாம். இதற்கு அதிகபட்சமாக 8 லட்சம் ரூபாய் வரை மானியம் கிடைக்கிறது. மதுரையில் 80 எக்டேர் பரப்பில் மூலிகை பயிர் சாகுபடிக்காக 8.52 லட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. சென்னா பயிரிட ஒரு எக்டேருக்கு 5 ஆயிரம் மானியமும், வேம்பு நடவு செய்ய 7500 ரூபாயும் மானியமாக வழங்கப்படுகிறது, என்றார்.

**இலையில் நோய்; மா விளைச்சல் பாதிப்பு : அடுத்த பருவம் தப்புமா?**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,23:53 IST

திருப்புத்தூர் : நோய் தாக்குதலால் திருப்புத்தூர் பகுதியில், மா விளைச்சல் பாதித்துள்ளது. அடுத்த பருவ விளைச்சலும் பாதிக்கும் என்ற கவலையில் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.
இப்பகுதியில் 150 எக்டேரில் மா மரங்கள் உள்ளன. கோடை காலத்தில் பூத்து தற்போதைய பருவத்தில் மாங்காய் விளையும். இலையில் ஏற்பட்டுள்ள ஒரு வித நோய், பரவலாக காணப்படுவதால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார்பட்டி விவசாயி கண்ணன் கூறுகையில், ""முதலில் இலை கொழுந்தில் சிலந்தி வலை போல நூல்கள் தோன்றுகிறது. இலைகள் அரிக்கப்பட்டு பூ, மொட்டுக்களும் பாதிக்கின்றன.

இதனால் விளைச்சல் முற்றிலுமாக குறைந்து விட்டது. வழக்கமான பருவத்திற்கு, டிசம்பரில் பூக்கும். தொடர்ந்து நோய் தாக்குதல் இருந்தால் ஏப்., மே விளைச்சலும் பாதிக்கப்படும்," என்றார். தோட்டக்கலை அலுவலர் தமிழ்ச்செல்வி கூறுகையில், ""கடந்த ஆண்டில் மழை குறைவால் விளைச்சல் குறைவாக உள்ளது. சில இடங்களில் இலைமடக்கு நோய் தாக்கியுள்ளது. வேம்பு சார்ந்த மருந்து அடித்து நோயை கட்டுப்படுத்தலாம். அதுவே பாதுகாப்பானது. தற்போது நல்ல மழை உள்ளதால் ஏப்., பருவ விளைச்சல் நன்றாக இருக்கும். அடுத்த பருவத்திற்கு பூக்க துவங்கும் காலம் என்பதால், தற்போது மருந்து அடிப்பது நல்லது," என்றார்.

**பயிர் இழப்புகளை தவிர்க்க தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,23:16 IST

ஒட்டன்சத்திரம் : திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயிர் இழப்பீடுகளை தவிர்க்க மத்திய, மாநில அரசுகள் இணைந்து 50 சதவீத மானியத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அமல் படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு பருவத்தில் நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, பருத்தி, பயறு வகைகள், கரும்பு, வாழை, மிளகாய், வெங்காயப் பயிர்களுக்கு தேசிய வேளாண்மை காப்பீட்டு நிறுவனத்தால் காப்பீடு வசதி செய்யப்படுகிறது. சம்பா, நவரை பட்ட நெல் பயிருக்கு காப்பீட்டுத் தொகை ஏக்கருக்கு ரூ.18 ஆயிரத்து 52. இதற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியம் ரூ.181. மக்காச்சோள பயிருக்கு காப்பீட்டுத் தொகை ரூ.7ஆயிரத்து 208 (பிரிமியம் ரூ.72), நிலக்கடலை பயிருக்கு காப்பீட்டுத் தொகை 18ஆயிரத்து 336 (பிரிமியம் ரூ.183), பருத்திக்கு காப்பீட்டுத் தொகை 39 ஆயிரத்து 560 (பிரிமியம் ரூ.423), கரும்புக்கு ரூ.53 ஆயிரத்து 92 (பிரிமியம் ரூ.849) மற்றும் மிளகாய், வெங்காயம், வாழை, தென்னைக்கும் காப்பீட்டு வசதி உள்ளது.

இத்திட்டத்தில் சேருவதற்கு அருகிலுள்ள தொடக்க வேளாண்மை வங்கியிலோ, வேளாண் விரிவாக்க மையத்திலோ விண்ணப்பங்கள் பெற்று கொள்ளலாம். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு பிரிமியத்தில் 55 சதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. அனைத்து விதமான இயற்கை சீற்றங்கலால் (புயல், வெள்ளம், பூச்சி நோய் தாக்குதல், இடி மின்னல்) ஏற்படும் மகசூல் இழப்பிற்கு இத்திட்டம் காப்பீடு வழங்குகிறது, திண்டுக்கல் மாவட்டத்திற்கு தமிழக அரசு ரூ.25 லட்சம் பிரிமியம் மானியமாக வழங்கி உள்ளது. மேலும் ஆலோசனைகள் பெற திண்டுக்கல் மாவட்ட பயிர் காப்பீட்ட சேவை மையத்தை 99444 06300 எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**பயிர் காப்பீடு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,02:33 IST

மதுரை: சம்பா நெல் பயிரிட்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன் பெறாத விவசாயிகள் டிச.,15 க்குள் பயிர் காப்பீடு செய்யலாம். சிறு, குறு விவசாயிகளுக்கு மானியம் நீங்கலாக ஏக்கருக்கு 117, இதர விவசாயிகளுக்கு 130 ரூபாய் செலுத்த வேண்டும். கூட்டுறவு சங்கங்களில் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, என மண்டல இணைப்பதிவாளர் குமார் தெரிவித்துள்ளார்.

**நுண்ணூட்டச் சத்து பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,02:34 IST

மதுரை:மதுரை விவசாயக் கல்லூரி, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றம் சார்பில், மதுரையில் விவசாயிகளுக்கு "பயிர் பூஸ்டர்' குறித்த கருத்தரங்கு நடந்தது.பேராசரியர் பாலகிருஷ்ணன் வரவேற்றார். பேராசிரியர் இப்ராஹிம் துவக்கி வைத்தார். பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, பயிரில் நூண்ணூட்டச் சக்தி குறைபாடுகளையும், அவற்றைப் போக்கும் பயிர் டானிக்குகளையும் விளக்கினார். விதை நுட்பவியல் துறைத் தலைவர் சிவசுப்ரமணியம் நன்றி கூறினார். பேராசிரியர்கள் பாலசுப்ரமணியம், ராஜா, கீதா, அமுதா, சிவக்குமார் பங்கேற்றனர்.

**சூரியகாந்தி ஏலம் மழையால் ரத்து**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,03:11 IST

வெள்ளகோவில்: வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், சூரியகாந்தி விதைகளை ஏலத்துக்கு விவசாயிகள் கொண்டு வராததால், ஏலம் நடக்கவில்லை. வியாழக்கிழமைகளில் இங்கு சூரியகாந்தி ஏலம் நடக்கிறது. சென்ற வாரம் நான்கு விவசாயிகள் மட்டுமே ஏழு மூட்டை சூரியகாந்தி விவசாயிகளை கொண்டு வந்தனர். முதல் ரகத்துக்கு 31.81 ரூபாய், இரண்டாம் ரகத்துக்கு 26.69 ரூபாய் விலை கிடைத்தது. ஒரு லட்சத்து 2,000 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

தொடர் மழை காரணமாக, இப்பகுதி விவசாயிகள் நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு சூரியகாந்தி விதைகளை கொண்டு வரவில்லை. ஏலம் ரத்து செய்யப்பட்டது.

**வெள்ளகோவில் பகுதியில் "ராஜராஜன்-1000' சாகுபடி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 27,2010,03:11 IST

வெள்ளகோவில்: விவசாயத்துக்கு ஆள் கிடைக்காத நிலையில், "ராஜராஜன்-1000' நெல் சாகுபடி முறை பெரிதும் கை கொடுக்கிறது.
வேளாண் துறையினர் கூறியதாவது: வெள்ளகோவில் வட்டாரத்தில் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி நடக்கிறது. நடவு, களை பறித்தல், பூச்சிக்கொல்லி, உரம் என பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்கின்றனர். சில விவசாயிகள், வேளாண் துறையை அணுகாமல் தாங்களாகவே, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்கி உபயோகிக்கின்றனர். இதனால், நோய் தாக்கம் குறைவதில்லை; மேலும், தீவிரம் அடைகிறது. நோய் தீவிரம் அடைந்த பின், வேளாண் துறையை அணுகுகின்றனர்.

இதுபோன்ற இடர்பாடுகளில் இருந்து "ராஜராஜன்-1000' நெல் சாகுபடி முறை விவசாயிகளை பாதுகாக்கிறது. அடியுரமாக யூரியா, நுண்ணுயிர் உரங்களை இட்டு, நாற்றுக்கு நாற்று முக்கால் அடி இடைவெளியில் நடவு செய்யப்படுகிறது. நடவுக்குப்பின் மேலுரமாக யூரியா, பொட்டாஷ் உரங்கள் நான்கு முறை இட வேண்டும். நோய் தாக்குதல் இருந்தால் மட்டும், வேளாண் துறை பரிந்துரைக்கும் மருந்துகளை வாங்கி பயன்படுத்த வேண்டும். ஒற்றை சாகுபடி முறையில் நடவு செய்யும்போது, எந்திரத்தை பயன்படுத்தி எளிதில் களையை அகற்ற முடியும். இந்த இயந்திரத்தை பயன்படுத்தி களை அகற்றும்போது, நாற்றின் பக்க வேர்கள் வெட்டப்படுகின்றன. வெட்டப்படும் பகுதியில் இருந்து புதிய தூர் பிடித்து, விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைக்கிறது.

நாற்றுக்கு நாற்று இடைவெளி அதிகம் இருப்பதால், நோய் தாக்கம் மற்றும் நோய் பரவும் தன்மை குறைகிறது. மழைகாலங்களில் வயலில் தேங்கும் நீரை வெளியேற்றுவதும் சுலபமாகிறது. விவசாயிகளுக்கு ஆள் பற்றாக்குறை, பூச்சிக்கொல்லி, செலவு உள்ளிட்ட பிரச்னைகள் தவிர்க்கப்படுகின்றன. இவ்வாறு, வேளாண் துறையினர் கூறினர்.

**ஸ்ரீவி.,யில் நெல் நடவு பணிதீவிரம் காட்டும் விவசாயிகள்**
பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,23:22 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவி.,யில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் விவசாயிகள் நெல் நடவு பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.மழையால் வாழைக்குளம், சிவந்திப்பட்டி, இடையன்குளம், மறவன்குளம், மொட்டபத்தான், கொத்தன்குளம்,பெரியகுளம் உட்பட பல கண்மாய்கள் நிறைந்துள்ளன. இதனால் இக்கண்மாயை நம்பி பாசனம் செய்யும் விவசாயிகள் இது வரை 500 எக்டேர் பரப்பில் நெல் நடவு பணியை துவங்கியுள்ளனர்.

ஒரே நேரத்தில் பலரும் முனைந்துள்ளதால் நாற்றுகள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். தற்போது பெய்த மழையால் விவசாயிகள் மக்கா சோளத்தை பயிர் செய்தால் மீண்டும் மழையை நம்பி இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பயிறு,எள் போன்றவற்றை நடவு செய்து வருகின்றனர்.நிறையாத கண்மாய்கள்: மேற்கு தொடர்ச்சிமலை பகுதியில் அதிகளவு பெய்து வருவதால் அப்பகுதியிலுள்ள கண்மாய்கள் மட்டுமே நிரம்பி வருகின்றன.

பிள்ளையார் நத்தம், பொட்டக்குளம், நதிக்குடி, அச்சம்தவிர்த்தான், சென்னாக்குளம், அணைத்தலைப்பட்டி, நாகபாளையம், மீனாட்சிபுரம், பூவாணி, தட்டாங்குளம், வெள்ளமடம், துலக்கன்குளம்,வேப்பங்குளம் கண்மாய்களுக்கு தண்ணீர் வரத்து இல்லாததால் இப்பகுதி விவசாயிகள் கிணற்று பாசனத்தை நம்பி வெங்காயம் சாகுபடி செய்து வருகின்றனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் தேனீ வளர்ப்பு பயிற்சி*

*கோவை, நவ.27–*

*கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்தில் வருகிற 6–ந் தேதி தேனீ வளர்ப்பு குறித்த ஒருநாள் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த பயிற்சியில் தேனீ கூட்டங்களை கண்டு பிடித்து வளர்க்கும் முறை, சேர்த்து வளர்க்கும் முறை, ராணீத் தேனி உற்பத்தி, இயற்கை எதிரிகள் நிர்வாகம் ஆகியவை குறித்த பயிற்சி வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்குள் பூச்சியியல் துறைக்கு தங்கள் சொந்த செலவில் வர வேண்டும். பயிற்சி கட்டணமான ரூ.150– ஐ நேரடியாக பயிற்சி நாளன்று செலுத்த வேண்டும். பயிற்சியானது காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, வேளாண்*

பல்கலைக்கழகம், என்ற முகவரிக்கு நேரில் அணுகி தெரிந்து கொள்ளலாம். இந்த தகவல் வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி ரவிக்குமார் தியோடர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## மானியச் செலவினம் உயர்ந்துள்ளதால் கூடுதலாக ரூ.30,000 கோடி நிதி வேண்டி உர அமைச்சகம் கோரிக்கை



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உர நிறுவனங்களுக்கான மானிய செலவினம் உயர்ந்து வருவதால், இதனை எதிர்கொள்ளும் வகையில் கூடுதலாக ரூ.30,000 கோடி நிதி உதவி வழங்குமாறு மத்திய உர அமைச்சகம், அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இதனால் மத்திய அரசுக்கு நிதிச் சுமை அதிகரிக்கும் எனத் தெரிகிறது.

மானிய விலை

விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், முக்கிய உரங்களை அரசு மானிய விலையில் அளித்து வருகிறது. குறைந்த விலையில் உரங்களை விற்பனை செய்வதால் நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஏற்று, அந்த தொகையை வழங்குவதே மானியமாகும். நடப்பு நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் உர மானியத்திற்காக ரூ.52,837 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது.

பட்ஜெட் மதிப்பீடு

இதற்கு மாறாக உர அமைச்சகம் தற்போது இதற்கான செலவினம் ரூ.82,245 கோடியாக அதிகரிக்கும் என தெரிவித்துள்ளது. எனவே பட்ஜெட் மதிப்பீட்டைக் காட்டிலும் உர மானியச் செலவு ரூ.29,408 கோடி அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இறக்குமதி

செய்யப்படும் உர வகைகள் மற்றும் சர்வதேச சந்தையில் முக்கிய மூலப்பொருள்களின் விலை உயர்வு போன்றவையே இதற்கு காரணம் என பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 2010–ஆம் ஆண்டில்தான் சில்லரை விற்பனையில் உரங்களின் விலையில் சிறிது மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய உர மற்றும் ரசாயனத் துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஸ்ரீகாந்த் குமார் ஜனா தெரிவித்தார். இதனால் உரங்களின் உண்மையான விலைக்கும், மானியச் சலுகையுடன் கூடிய சில்லரை விற்பனை விலைக்கும் இடையே பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் மத்திய அமைச்சர்கள் அடங்கிய சிறப்புக் குழு ஒன்று, வரும் திங்கள்கிழமையன்று உரத் துறையில் புதிய முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்க உள்ளது. அப்போது யூரியா உரத்தின் விலையை நிர்ணயம் செய்வதில் அரசுக் கட்டுப்பாடுகளை சற்றே தளர்த்துவது பற்றி முக்கியமாக பரிசீலனை செய்யப்பட உள்ளது.

மத்திய நிதி அமைச்சகம் ஏற்கனவே உர மானியத்திற்காக கூடுதலாக ரூ.5,000 கோடி செலவிடுவதற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதலைக் கோரியுள்ளது. இதனுடன் சேர்த்து உணவு மானியம் மற்றும் சமூக நலத்திட்டங்களுக்காக மேலும் ரூ.20,000 கோடியை செலவிட வேண்டிய நிலையில் மத்திய அரசு உள்ளது. அண்மைக் காலமாக, பாராளுமன்ற நடவடிக்கைகள் முழுமையாக முடங்கியுள்ள நிலையில் அரசின் கூடுதல் செலவினங்களுக்காக பாராளுமன்றம் அடுத்த வாரத்தில் ஒப்புதல் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3ஜி அலைவரிசை

மூன்றாவது தலைமுறையினருக்கான செல்போன் சேவை அலைவரிசை ஒதுக்கீடு மற்றும் அகண்ட அலைவரிசை ஒதுக்கீடு ஆகியவற்றின் ஏலம் வாயிலாக எதிர்பார்த்த தொகையைக் காட்டிலும் மத்திய அரசுக்கு கூடுதலாக ரூ.65,000 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மத்திய அரசின் நிகர நேரடி வரிவசூல், சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 18 சதவீதம் அதிகரித்து ரூ.2 லட்சம் கோடியைத் தாண்டி உள்ளது.

இறக்குமதி வரி, உற்பத்தி வரி, சேவை வரி உள்ளிட்ட மறைமுக வரி வசூலும், முதல் ஏழு மாதங்களில் 44 சதவீதம் உயர்ந்து ரூ.1.80 லட்சம் கோடியைத் தாண்டி உள்ளது. ஆக, கூடுதல் செலவினத்தை ஓரளவு எதிர்கொள்ளும் வகையில் மத்திய அரசின் வரி

மற்றும் இதர வருவாய் உயர்ந்துள்ளது. வரி மற்றும் இதர வருவாய் அதிகரித்து வருவதால், நடப்பு நிதி ஆண்டில் வாங்க திட்டமிடப்பட்டிருந்த கடனில் மத்திய அரசு ரூ.10,000 கோடி குறைத்துக் கொண்டுள்ளது.

நிதிப் பற்றாக்குறை

மத்திய பட்ஜெட்டில், ஒட்டுமொத்த வரி வசூலில் 18 சதவீத வளர்ச்சி காண இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை பெறப்பட்டுள்ள வரி வருவாய் இந்த இலக்கினை எட்ட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நடப்பாண்டில், நிதிப் பற்றாக்குறையை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டீ.பி) 5.5 சதவீத அளவிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. வரி வசூலில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி இதற்கு சாதகமாக உள்ளது. எதிர்பாராத வரவுகள் வாயிலாகவும் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. இதுபோன்ற காரணங்களாலும், நாட்டின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற அரசின் நிலைப்பாட்டாலும், உர அமைச்சகத்தின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அதிக அளவில் மழை பொழிவால் பாதிப்பு ரப்பர், மிளகு, தேங்காய், தேயிலை உற்பத்தி சரிவடையும் என மதிப்பீடு



பி கே கிருஷ்ணகுமார் – எஸ் சனந்தகுமார்

கொச்சி

பெருந்தோட்ட மற்றும் பணப் பயிர்கள் பட்டியலில் உள்ள இயற்கை ரப்பர், மிளகு,

தேங்காய், கோகோ மற்றும் தேயிலை ஆகியவற்றின் உற்பத்தியில் பின்னடைவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தென் மாநிலங்கள்

கேரளா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில், நடப்பு ஆண்டு மிக அதிக அளவில் மழை பொழிவு இருந்து வருகிறது. இதனால், மேற்கண்ட விளைபொருள்களின் உற்பத்தி மிகவும் பாதிப்புக்குள்ளாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஓராண்டாக, இயற்கை ரப்பருக்கான தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், இயற்கை ரப்பர் அதிக அளவில் உற்பத்தியாகும் கேரளாவில், கடந்த ஏழு மாதங்களாக தொடர் மழை இருந்து வருகிறது. இதனால், ரப்பர் பால் வடிப்பு பணி மிகவும் பாதிப்படைந்துள்ளது. அக்டோபர் மாதத்தில், ரப்பர் உற்பத்தி, சென்ற ஆண்டின் இதே மாதத்தை விட 7.6 சதவீதம் குறைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டில், கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு ரப்பர் உற்பத்தி குறையும் என்ற மதிப்பீடும் உள்ளது.

சென்ற ஆண்டில், ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.110 என்ற அளவில் இருந்தது. இது, தற்பொழுது ரூ.198–200 என்ற அளவில் விலை போய்க் கொண்டுள்ளது. விலை உயர்ந்துள்ளது என்றாலும், அதனால் விவசாயிகளுக்கு அதிக பலன் இல்லை என்று கூறப்படுகிறது. போதிய அளவிற்கு உற்பத்தி இல்லாததே இதற்கு காரணமாகும்.

மிளகு

காலதாமதமான மழைப் பொழிவால் மிளகு உற்பத்தியும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது என சர்வதேச மிளகு அமைப்பு தெரிவித்துள்ளது. சென்ற ஆண்டு நாட்டின் மிளகு உற்பத்தி 50,000 டன்னாக இருந்தது. இது, இவ்வாண்டு 48,000 டன்னாக குறைய வாய்ப்புள்ளது. அதேசமயம், சென்ற ஆண்டு ஒரு கிலோ மிளகின் விலை ரூ.140 என்ற அளவில் இருந்தது. உற்பத்தி குறைந்துள்ள நிலையில், தேவைப்பாடு அதிகரித்துள்ளதால், இதன் விலை தற்பொழுது 215–ஆக அதிகரித்துள்ளது என கிஷோர் ஸ்பைசஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கிஷோர் ஷாம்ஜி தெரிவித்தார்.

தேங்காய்

அதிக மழைப் பொழிவால், இவ்வாண்டு தேங்காய் மற்றும் கோகோ உற்பத்தியிலும் பின்னடைவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேரளா மற்றும் தமிழ்நாட்டில்தான் தேங்காய் அதிக அளவில் உற்பத்தியாகிறது. இவ்விரு மாநிலங்களிலும் அதிக அளவில் தேங்காய் உற்பத்தியாகும் இடங்களில் அதிக மழைப் பொழிவால் உற்பத்தி குறைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை எடுத்துக்காட்டும் வகையில், சென்ற ஆண்டு சில்லரை விற்பனையில் ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை ரூ.60 என்ற

*அளவில் இருந்தது. இது தற்பொழுது ரூ.85–90–ஆக அதிகரித்துள்ளது. நடப்பாண்டில், கேரளாவில் தேங்காய் உற்பத்தி 40 சதவீத அளவிற்கும், தமிழ்நாட்டில் 15 சதவீத அளவிற்கும் குறையும் என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.*

*கோகோ*

*நாட்டின் கோகோ உற்பத்தி ஆண்டுக்கு 12,000 டன் என்ற அளவில் உள்ளது. இதில், பெரும் பகுதி தென் மாநிலங்களில்தான் உற்பத்தியாகிறது. அதிக மழைப் பொழிவால் கோகோ உற்பத்தியும் இவ்வாண்டு 15–20 சதவீதம் குறையும் என்ற மதிப்பீடும் உள்ளது. தென்னிந்திய மாநிலங்களில், தேயிலை உற்பத்தி செப்டம்பர் மாதத்தில் 50 லட்சம் கிலோ குறைந்திருந்தது. இது, அக்டோபர் மாதத்தில் மேலும் 10–20 லட்சம் கிலோ குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.12 ஆயிரம் நஷ்டஈடு வழங்க வேண்டும் தமிழக அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கோரிக்கை

*சென்னை, நவ.27–*

*மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.12 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.*

*விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு*

*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலக்குழுவின் 3 நாள் கூட்டம் சென்னை கிண்டியில் உள்ள கட்சியின் தென்சென்னை மாவட்ட அலுவலகத்தில் நேற்று தொடங்கியது. மாநில செயற்குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், மத்தியக்குழு உறுப்பினர்கள் டி.கே.ரங்கராஜன், எம்.பி., உ.வாசுகி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் விவரம் வருமாறு:–*

*மழை வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். மழையால் பயிர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏக்கருக்கு ரூ.12 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். பாதிக் கப்பட்ட காய்கறி, வாழை உள்ளிட்ட சாகுபடிகளுக்கு ஏற்ற நிவாரணத்தொகை வழங்கிட வேண்டும். மேலும், பயிர் காப்பீட்டு*

பலன் ஒவ்வொரு விவசாயிக்கும் கிடைத்திட அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். சாகுபடி அழிந்த நிலங்களில் புதிய சாகுபடிகளை மேற்கொள்ள மானிய விலையில் விதை, உரம் வழங்கப்பட வேண்டும்.

மின்கசிவு விபத்து

மழையின்போது மின்சாரம் தாக்கி உயிரிழப்பு ஏற்பட்டால் மழைக்கு பலி என்று சேர்க்கப்படாது என அரசு அறிவித்திருப்பதை, ஏற்க இயலாது. மழை வெள்ளத்தால் விபத்து ஏற்பட்டாலும் மற்றும் மழை வெள்ள பாதிப்பால் மின்கசிவு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டாலும் மழைக்கு பலியானவர்கள் என்ற பட்டியலில் சேர்த்து பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் நஷ்ட ஈடும், இதைப்போலவே மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கால்நடை உரிமையாளர்களுக்கு நிவாரணமும் வழங்க வேண்டும்.

வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதோடு, மழையினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் அளிக்க வேண்டும்.

நீலகிரி மாவட்டம், அரவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை விபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மத்திய அரசு தலா ரூ.10 லட்சம் நஷ்ட ஈடும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடும் வழங்க வேண்டும். அதோடு, இதுபோன்ற விபத்துகள் எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.